Let the mind manage the body
Que l'esprit gère le corps

**TAMIL**
**(Subject code No. P170)**

**Index Number:** ..........................................................................................

mauritiusexaminationssyndicate

# MAURITIUS EXAMINATIONS SYNDICATE

## Primary School Achievement Certificate Assessment

## 2021-2022

**Time: 1 hour 45 minutes** **Total Marks: 100**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Check that this assessment booklet contains **9** questions printed on **17** pages.
2. Write your Index Number on the assessment booklet in the space provided above
3. You should not use red, green or black ink in answering questions.
4. Write all your answers clearly in the assessment booklet.
5. Attempt **all** questions.


| Question | Marking | | | Revision | | | Control | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Marks | | Sig | Marks | | Sig | Marks | | Sig |
| 1A | | | | | | | | | |
| 1B | | | | | | | | | |
| 2A | | | | | | | | | |
| 2B | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4A | | | | | | | | | |
| 4B | | | | | | | | | |
| 5A | | | | | | | | | |
| 5B | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7A | | | | | | | | | |
| 7B | | | | | | | | | |
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| **Total** | | | | | | | | | |
| **Sig (HoG)** | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate


Marks

**Question 1 A (5 marks)**


**ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுது.**




வண்டி
_______________________




_______________________




_______________________



_______________________



_______________________




_______________________

**Question 1 B (5 marks)**


**கீழ்க்காணும் தொடர்களைச் சரியான படத்தோடு இணை.**




ஆசிரியை பகுதியை
விளக்குகிறார்.




குமரன் குளிக்கிறான்.




தேவி கமலாவுக்கு ஒரு பரிசு
கொடுக்கிறாள்.



என் தம்பி சமையல்
அறையைச் சுத்தம்
செய்கிறான்.



மாணவர்கள் காற்றாடியோடு
விளையாடுகிறார்கள்.



காட்டில் ஒரு யானை
இருக்கிறது.

Marks

**Question 2 A (10 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

(எ - டு)

..................... முன்னால் ஒரு கடை இருக்கிறது.

| | |
|---|---|
| அ. பள்ளி | இ. பள்ளியில் |
| ஆ. பள்ளியை | (ஈ) பள்ளிக்கு |

---

க. அம்மா பை எடுக்கிறார். .....................வேலைக்குப் போகிறார்.

| | |
|---|---|
| அ. அவன் | இ. அவர் |
| ஆ. அவள் | ஈ. அவர்கள் |

உ. வாசன் .....................பந்து கொண்டுவந்தான்.

| | |
|---|---|
| அ. ஒரு | இ. பல |
| ஆ. இரண்டு | ஈ. மூன்று |

ங. மாணவர்கள் சுற்றுலாப் ...................... போனார்கள்.

| | |
|---|---|
| அ. பயணத்தைப் | இ. பயணம் |
| ஆ. பயணத்தில் | ஈ. பயணத்துக்குப் |

ச. இப்பொழுது நாங்கள் ஆங்கிலப் பாடத்தைப் ...................... .

| | |
|---|---|
| அ. படிக்கிறோம் | இ. படித்தோம் |
| ஆ. படிக்கிறார்கள் | ஈ. படித்தார்கள் |

ரு. நீ ..................... வந்தாய்?

| | |
|---|---|
| அ. யாரை | இ. யாரோடு |
| ஆ. யாருக்கு | ஈ. யாரால் |



Please turn over this page

Marks

சூ. தம்பி பழத்தைப் ...................... நண்பனுக்குக் கொடுத்தான்.

அ. பறி | இ. பறிக்கிறான்

ஆ. பறித்து | ஈ. பறிக்கிறார்கள்

எ. அவர்கள் ...................... வீட்டுக்குப் போவார்கள்?

அ. எப்போது | இ. எவ்வளவு

ஆ. என்ன | ஈ. எவை

அ. பேருந்தில் பயணிகள் .......................ப் பேசுகிறார்கள்.

அ. சத்தம் | இ. சத்தமாக

ஆ. சத்தமான | ஈ. சத்தமானது

கூ. நாயும் ...................... விளையாடுகின்றன.

அ. பூனையை | இ. பூனைக்கு

ஆ. பூனையும் | ஈ. பூனை

க0. அப்பா ......................ப் பணம் கொடுக்கிறார்.

அ. பாட்டியும் | இ. பாட்டியை

ஆ. பாட்டி | ஈ. பாட்டிக்கு

Marks

**Question 2 B (5 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. தாத்தா ..................... அறையில் உணவைச் சமைக்கிறார்.

அ. தூங்கும் இ. வரவேற்பு

ஆ. சமையல் ஈ. குளியல்

உ. இன்றைக்கு நான் களைப்பாய் இருக்கிறேன். அதனால், முன்பாகத் ..................... .

அ. ஓடுவேன் இ. தூங்குவேன்

ஆ. பார்ப்பேன் ஈ. நீந்துவேன்

ங. ஒரு .....................க் கொண்டு வா! நான் உட்காருவேன்.

அ. மேசையை இ. பேனாவை

ஆ. தட்டை ஈ நாற்காலியை

ச. மாமனுடைய வண்டி பழையது. அவர் ஒரு புதிய வண்டியை ....................... .

அ. வாங்குவார் இ. பேசுவார்

ஆ. செய்வார் ஈ. படிப்பார்

ரு. நான் என் பயிற்சி நூலைப் ...................... போடுகிறேன்.

அ. அளவுகோலில் இ. பையில்

ஆ. கைக்குட்டையில் ஈ. கதவில்

Marks

**Question 3 (10 marks)**

**கீழ்க்காணும் கடிதத்தைக் கவனமாகப் படி.**

வணக்கம் வேதா.

நீ எப்படி இருக்கிறாய்?

நான் நலமாய் இருக்கிறேன். நான் விடுமுறைக்காகத் துபாய் நகரத்தில் இருக்கிறேன். இன்றைக்கு வியாழக்கிழமை. நான் 'கலினா' கடற்கரையில் உட்காருகிறேன். இந்த இடம் எனக்கு மிகவும் பிடிக்கும். ஏனென்றால் துபாய் ஓர் அழகான நகரம். ஆனால், துபாயில் வெயில் அதிகமாய்க் காய்கிறது. வெயில் எனக்குப் பிடிக்காது. நாள்தோறும் நான் கடலில் நீந்துகிறேன். மேலும் பல பொருட்களையும் வாங்கினேன். உனக்கும் ஒரு பரிசு வாங்கினேன். அது ஓர் அழகான சட்டை.

'மே' மாதம் பதினான்காம் தேதி அன்று நான் திரும்புவேன்.

ஏழு மணிக்கு மொரீசியசை அடைவேன்.

'மே' மாதம் பதினாறாம் தேதி அன்று பள்ளியில் உன்னைச் சந்திப்பேன். என்னால் காத்திருக்க முடியாது.

உன் அன்பான தோழி,

குமுதா.

Marks

**கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. குமுதா யாருக்கு இந்தக் கடிதத்தை எழுதினாள்? [1]

........................................................................

உ. குமுதா ஏன் துபாய்க்குப் போனாள்? [1]

........................................................................

ங. எந்த நாளில் குமுதா இந்தக் கடிதத்தை எழுதினாள்? [1]

........................................................................

ச. ஏன் குமுதாவுக்குத் துபாய் பிடிக்கும்? [1]

........................................................................

ரு. துபாயில் காலநிலை எப்படி இருக்கிறது? [1]

........................................................................

சு. துபாயில் குமுதா என்ன என்ன செய்தாள்? [2]

(i) ........................................................................

(ii) ........................................................................

எ. குமுதா எந்தப் பரிசு வாங்கினாள்? [1]

........................................................................

அ. எத்தனை மணிக்குக் குமுதா மொரீசியசை அடைவாள்? [1]

........................................................................

கூ. எந்தத் தேதி குமுதா பள்ளிக்கு வருவாள்? [1]

........................................................................



Please turn over this page

**Question 4 (15 marks)**

**தந்துள்ள பகுதியைக் கவனமாகப் படி.**

ஒரு வாரத்துக்குப் பிறகு அழகியும் அவள் பெற்றோரும் வீட்டுக்குச் திரும்பினார்கள். அவர்கள் ரொடிரீகு தீவுக்குப் போனார்கள். “வீட்டுக்குத் திரும்ப மிகவும் நல்லது, அல்லவா அழகி?” என்றார் அம்மா. “ஆம், எனக்குப் பசிக்கிறது,” என்று அழகி சொன்னாள்.

“குளிர்சாதனப் பெட்டியில் பால், முட்டை, ரொட்டி மற்றும் காய்கறிகள் உள்ளன,” என்றார் அம்மா.

“நான் இரவுச் சாப்பாட்டைச் சமைப்பேன்,” என்று அப்பா சொன்னார்.



குளிர்சாதனப் பெட்டி

“அப்பா தக்காளிச் சோறு சமைப்பீர்களா?” என்று அழகி கேட்டாள்.

எல்லாரும் வீட்டில் நுழைந்தபோது, ஒரு சிக்கல் இருக்கிறது என்று உணர்ந்தார்கள். உள்ளே எங்கும் ஒரே நாற்றம்*. எங்கிலிருந்து இந்த நாற்றம் வந்தது?

அம்மா தூங்கும் அறையிலும் தோட்டத்திலும் போய்ப் பார்த்தார். அழகி குளியல் அறையில் போய்ப் பார்த்தாள்.

சமையல் அறையில் உள்ள குளிர்சாதனப் பெட்டியைக் காட்டி, “அது அங்கிலிருந்து வருகிறது,” என்று அப்பா சொன்னார்.

“குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பார்ப்போமா?” என்று அம்மா கேட்டார். அவர் அதைத் திறந்தார். எல்லாரும் மூக்கை மூடினார்கள்.

“உள்ளே வெப்பமாய் உள்ளது. விளக்கும் இல்லை,” என்றார் அம்மா.

Marks

“என்ன நடந்தது?” என்று அழகி கேட்டாள்.

“குளிர்சாதனப் பெட்டி சரியில்லை. உணவுப் பொருட்கள் எல்லாம் கெட்டுப் போய்விட்டன,” என்று அப்பா விளக்கினார்.

“பாலும் கெட்டுப் போய்விட்டதா?” என்று அழகி கேட்டாள்.

“ஆம், பால் குளிராக வைக்க வேண்டும்,” என்று அம்மா கூறினார்.

“ரொட்டியும் கெட்டுப் போய்விட்டதா?” என்று அழகி கேட்டாள்.

“ஆம், ரொட்டி பச்சை நிறமாய் மாறியது. இது சாப்பிட்டால் உனக்கு வியாதி வரும்,” என்றார் அப்பா.

“காய்கறிகளும் கெட்டுப் போய்விட்டனவா?” என்று அழகி வருத்தத்தோடு கேட்டாள்.

“ஆம், எங்களால் சாப்பிட முடியாது,” என்றார் அம்மா.

அழகி ஒரு முட்டையை எடுத்தாள். அது அவள் கையிலிருந்து கீழே விழுந்தது. அப்பொழுது முட்டையின் நாற்றம் இன்னும் அதிகமாகிவிட்டது. இனிமேல் அழகி மறுபடியும் முட்டை சாப்பிட மாட்டாள்.

“சீ, சீ, சீ!” என்று கத்திக் கொண்டே வெளியே ஓடிப் போனாள்.

அப்பா கெட்டுப் போன எல்லா உணவுப் பொருட்களையும் குப்பையில் போட்டார். அவர் குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்தார்.

நாற்றம்***** : Bad smell



Please turn over this page

Marks

**Question 4A (5 marks)**

**அ. ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் சரியானது. அச்சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. அழகியும் அவள் பெற்றோரும் ஒரு ........................ பிறகு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அ. நாளுக்குப்

ஆ. வாரத்துக்குப்

இ. மாதத்துக்குப்

ஈ. ஆண்டுக்குப்

உ. அழகி ........................ சாப்பிட விரும்பினாள்.

அ. ரொட்டியைச்

ஆ. காய்கறியைச்

இ. தக்காளிச் சோற்றைச்

ஈ. முட்டையைச்

ங. ........................ ஒரு சிக்கல் இருந்தது.

அ. சமையல் அறையில்

ஆ. குளியல் அறையில்

இ. தூங்கும் அறையில்

ஈ. தோட்டத்தில்

ச. அம்மா குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தபோது ........................ .

அ. உள்ளே குளிராய் இருந்தது

ஆ. எல்லாரும் மூக்கை மூடினார்கள்

இ. உணவுப் பொருட்கள் நன்றாக இருந்தன

ஈ. பால் குளிராக இருந்தது

ரு. இறுதியில் அப்பா ........................ .

அ. உணவுப் பொருட்களைக் குப்பையில் போட்டார்

ஆ. உணவுப் பொருட்களைச் சமைத்தார்

இ. உணவுப் பொருட்களைச் சாப்பிட்டார்

ஈ. உணவுப் பொருட்களைக் கழுவினார்

**Question 4 B (10 marks)**

**ஆ. கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. அழகியும் அவள் பெற்றோரும் எங்கே போனார்கள்? [1]

…………………………………………………………………………

…………………………………………………………………………..

உ. யார் இரவுச் சாப்பாட்டைச் சமைப்பார் என்று சொன்னார? [1]

…………………………………………………………………………

…………………………………………………………………………..

ங. வீட்டுக்குள்ளே ஒரு சிக்கல் இருந்தது என்று அவர்களுக்கு எப்படித் தெரிந்தது? [1]

…………………………………………………………………………

…………………………………………………………………………..

ச. உணவுப் பொருட்கள் ஏன் கெட்டுப் போய்விட்டன? [1]

…………………………………………………………………………

…………………………………………………………………………..

Marks

ரு. ரொட்டியைச் சாப்பிட்டால் அழகிக்கு என்ன வரும்? [1]

……………………………………………………………………

……………………………………………………………………...

சூ. ஏன் அழகி மறுபடியும் முட்டை சாப்பிட மாட்டாள்? [1]

……………………………………………………………………

……………………………………………………………………...

எ. **கதையின் அடிப்படையில் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக எழுது. பொருத்தமான எண்ணைக் கட்டத்தில் எழுது. ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டது.** [4]

- அழகி வெளியே ஓடிப் போனாள். [ ]
- அப்பா குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்தார். [ ]
- அம்மா குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தார். [ ]
- அழகியும் குடும்பத்தாரும் வீட்டில் நுழைந்தார்கள். [ **1** ]
- ஒரு முட்டை அழகி கையிலிருந்து கீழே விழுந்தது. [ ]

Marks

**Question 5 A (4 marks)**

**(அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் உள்ள சொற்களை ஒழுங்காக எழுது.**

க. ஆடினோம் நாங்கள் நன்றாக நேற்று

........................................................................

........................................................................

உ. ரொட்டியைச் பூனை ஏறி சாப்பிட்டது மேசைமேல்

........................................................................

........................................................................

**Question 5 B (6 marks)**

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களை முடிக்க.**

க. வாணன் குவளையை எடுத்து ..........................................

........................................................................

உ. நாளைக்கு என் பிறந்தநாள்; அதனால், ................................

........................................................................

ங. காலையில் அம்மா எழுந்த பிறகு, அவர்.................................

........................................................................



Please turn over this page

Marks

**Question 6 (10 marks)**

**கீழ்வரும் கட்டத்தில் பத்துச் சொற்கள் தரப்பட்டுள்ளன. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பகுதியில் உள்ள கோடிட்ட இடத்தில் எழுது. ஒவ்வொரு சொல்லையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **மகிழ்ச்சியோடு** | **பார்ப்பான்** | **கதையைச்** | **அன்று** | **பாடி** |
| **வானத்தில்** | **ஏற்றினார்** | **பயமாய்** | **ஓய்வாக** | **சேர்ந்து** |

ஒரு நாள் மாலையில் அகிலனும் அவன் பெற்றோரும் இரவு உணவைத் தோட்டத்தில் சாப்பிட விரும்பினார்கள். இருட்டு என்பதால் அகிலனுக்குப் .............................. இருந்தது. எனவே, அப்பா சில மெழுகுவர்த்திகளை .............................. . மேலும், .............................. நிலாவின் வெளிச்சமும் இருந்தது.

அகிலன் எப்போதும் தொலைக்காட்சியைப் ............................ . இப்பொழுது அவன் தோட்டத்தில் ..................... விளையாடுகிறான். பெற்றோர் நாள் முழுதும் வேலை செய்தார்கள். இப்பொழுது அவர்கள் .............................. இருக்கிறார்கள். எல்லாரும் .............................. இரவு உணவைச் சாப்பிட்டார்கள். பிறகு, அப்பா ஓர் அரசனைப் பற்றி ஓர் அழகான .............................. சொன்னார். குடும்பத்தில் எல்லாரும் ஆடிப் .............................. நேரத்தைக் கழித்தார்கள். .............................. இரவு அவர்கள் எல்லாரும் மிகவும் மகிழ்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் மிகத் தாமதமாகத் தூங்கப் போனார்கள்.

Marks

**Question 7 A (5 marks)**

**(அ) அடிக்கோடுள்ள சொற்களில் பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. ஆசிரியர் **எத்து** மணிக்கு வந்தார். ..........................

உ. நான் மிட்டாயைச் **சாப்பிட்டான்**. ............................

ங. **எவ்வளவு** மாணவர்கள் வரவில்லை? ............................

ச. கோவலன் இரண்டு **பழம்** வாங்கினான். ............................

ரு. அமுதா விரைவாக **ஓடினார்கள்**. ............................

**Question 7 B (5 marks)**

**(ஆ) வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. கந்தன் ...................... பயிற்சி சரியானது. **(எழுது)**

உ. ...................... பல நிறப் பேனாக்கள் இருக்கின்றன. **(பெட்டி)**

ங. சிறுவன் பூவை ...................... அம்மாவுக்குக் கொடுத்தான். **(எடு)**

ச. பூனை ...................... முன்னால் தூங்குகிறது. **(கட்டில்)**

ரு. அவள் ஒரு ...................... விடையைக் கொடுத்தாள். **(சரி)**



Please turn over this page

Marks

**Question 8 (10 marks)**


**கீழ்க்காணும் ஒவ்வொரு படத்துக்கும் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஒரு <u>கதையை அமைக்க,</u> அச்சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைத்து எழுது.**



ஒரு நாள் – செடி

.................................................


.................................................



நாள்தோறும் – தண்ணீர் ஊற்று

.................................................

.................................................



சில ஆண்டுகளுக்குப் பிறகு – மரத்தில் பழங்கள்

.................................................

.................................................



சில நேரங்களில் – மரத்தின் மேல் ஏறு

.................................................

.................................................



கோடைக் காலத்தில் – மரத்தின் கீழ்

.................................................

.................................................

Marks

**Question 9 (10 marks)**

**தந்துள்ள குறிப்புகளைக் கொண்டு 10 வரிகள் அளவில் ஒரு கதை எழுது.**

- ஓய்வு நேரத்தில் திருடன் ஒருவன் வகுப்பில் நுழைதல்
- அவன் என்ன திருடினான்?
- நீயும் உன் நண்பர்களும் அவனைப் பார்த்தல்
- நீயும் உன் நண்பர்களும் என்ன செய்தீர்கள்?
- கடைசியில் என்ன நடந்தது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................



Please turn over this page

Marks

**BLANK PAGE**